

# இடம் பொருள் கலைஞர்

76

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் உருது அகாடமி!












## உருது அகாடமி

### இதயத்தில் இருந்து செய்த அரும்பணி!

*20-ஆம் நூற்றாண்டின் இந்தியத் துணைக் கண்ட அரசியல் இரண்டு வடிவங்களைக் கொண்டிருந்தது. வட இந்தியாவின் அரசியல், மதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால், தென்னிந்திய அரசியலோ பார்ப்பனரல்லாத மக்களின் கல்வி- வேலை வாய்ப்பு உரிமைகளை நிலை நாட்டுவதை மையமாகக் கொண்டிருந்தது. இந்த அரசியலை முன்னெடுத்த திராவிட இயக்கத்தின் ஒரு பகுதியாக, ஒன்றிப் போயிருந்தவர்கள் இஸ்லாமியர்கள். பெரியார், அண்ணா வளர்த்த அந்த உறவு, முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் வேறு ஒரு பரிணாமத்தை அடைந்தது. குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்ற சமயத்தில், இஸ்லாமியர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கைகள் வலுத்திருந்தன. பிற்படுத்தப் பட்டோருக்கான பட்டியலில் இஸ்லாமியர்களை சேர்க்க இடமில்லை என்று அத்துறையின் அமைச்சரும் சட்டப்பேரவையில் விளக்கம் கொடுத்தார்.*

*எதிர்வரிசையில் இருந்த இஸ்லாமிய சட்டமன்ற உறுப்பினர்கள் கிளர்ந்தெழுந்தனர். அமைச்சரை அமரச் சொல்லிவிட்டு எழுந்த கலைஞர், “சட்டத்திலே இடமில்லை என்கிறார் அமைச்சர். பரவாயில்லை, என் இதயத்திலே இடம் இருக்கிறது'' என்று கூறிவிட்டு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இஸ்லாமி யர்கள் இடம்பெறுவார்கள் என்று அறிவித்து, நடைமுறையும் படுத்தினார்.*

*மிலாது நபிக்கு விடுமுறை அளித்தவரும் கலைஞரே. இப்படி இஸ்லாமியர்களுக்கு இதயத்தில் இருந்து, முத்தமிழறிஞர் கலைஞர் செய்திட்ட அரும்பணிகளில் ஒன்றுதான் ‘உருது அகாடமி’*

### ‘உருது அகாடமி’ கோரிக்கை

*இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிற 15 தேசிய மொழிகளில் ஒன்று உருது. காஷ்மீரில் உருதுதான் ஆட்சி மொழி. புகழ்பெற்ற அறிஞர்களும் படைப்பாளி களும் உருதுவில் ஏராளம். தமிழ்நாட்டில் உருதுமொழியைப் பரப்பவும், அதன் வளர்ச்சிக்கு உதவிடவும் ‘உருது அகாடமி’ ஏற்படுத்த வேண்டும் என்று 1991-ஆம் ஆண்டில் ஆற்காடு இளவரசர் நவாப் ஜி.எம்.அப்துல் காதர் தமிழ்நாடு அரசுக்கு 13-12-1991 அன்று கோரிக்கை வைத்தார்.*

*அதன் பின்னர் பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளிடம் இருந்தும் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், அப்போதைய அ.தி.மு.க. அரசு செவிசாய்க்கவில்லை.*

### முத்தமிழறிஞர் கலைஞர் வந்தார்!

*1996-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நான்காவது முறையாக முதலமைச்சரான பிறகு, உருது அகாடமிக்கு உயிர் வடிவம் கொடுக்கும் பணிகள் ஆக்கப்பூர்வமாய் முன்னெடுக்கப்பட்டன. பிற மாநிலங்களில் உருது அகாடமி எப்படிச் செயல்படுகிறது, அதற்கென எத்தகைய விதிகள் வகுக்கப்பட்டுள்ளன என்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டன.*

*1999-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10-ஆம் தேதி உயர்கல்வித்துறையின் சார்பில், இதற்காக கூட்டம் ஒன்று நடைபெற்றது. கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் செயல்பட்டுக் கொண்டிருந்த உருது அகாடமியின் செயல்பாட்டு முறைகளை ஆய்வுசெய்து அறிக்கை தரும்படி, அன்றைய கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முத்துவீர கணபதி, சென்னைப் பல்கலைக்கழக உருதுப் பேராசிரியர் சையத் சஜ்ஜட் உசைன் ஆகியோருக்கு உத்தரவிட்டார் கலைஞர். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் ‘உருது அகாடமி’ அமைக்கப்படும் என்று 25.10.1999 அன்று அறிவிப்பு வெளியானது.*

### உருது அகாடமியின் வடிவமைப்பு

*“உருது மொழியின் வளர்ச்சி பங்காற்றும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த அகாடமியின் தலைவராக கல்வி அமைச்சரை நியமிக்கலாம். 21 உறுப்பினர்கள் கொண்ட ஆட்சிக்குழு, 11 உறுப்பினர்களைக் கொண்ட நிலைக்குழுவால் இந்த அகாடமி செயல்படும். ஆட்சிக்குழுவில் தலைவருடன் துணைத்தலைவர், அலுவல் வழி உறுப்பினர்கள் நான்கு பேர், உருது கவிஞர்கள் - எழுத்தாளர்கள் - ஆராய்ச்சி யாளர்களை உள்ளடக்கிய 15 உருது அறிஞர்கள் இடம்பெறுவர்.*

*அரசு நியமிக்கும் ஆட்சிக் குழுவின் துணைத்தலைவரே நிலைக்குழுவின் தலைவராக செயல்படுவார். 4 அலுவல் வழி உறுப்பினர்களும், ஆட்சிக்குழுவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 6 உருது அறிஞர்களும் நிலைக்குழுவில் செயல்படுவர். இரண்டு குழுவினருக்கும் பொறுப்பு காலம் 3 ஆண்டுகள்” என்பன போன்ற வடிவமைப்புத் திட்டங்களை முத்துவீர கணபதி மற்றும் சையத் சஜ்ஜட் உசைன் குழு அறிக்கையாக வடித்திருந்தது. இந்த அறிக்கையின் அடிப்படையில் 27.02.2000 அன்று கல்வி அமைச்சர் பேராசிரியர் தலைமையில் ‘உருது அகாடமி’ செயல்படும் என்று தமிழ்நாடு அரசு ஆணையிட்டது.*

**உருது மொழியை வளர்த்தெடுத்தல், தமிழறிஞர்கள் - படைப்பாளிகளைப் பாராட்டுதல் எனப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது உருது அகாடமி.**

### தொடக்க விழா

*21.07.2000 அன்று உருது அகாடமியின் தொடக்க விழா, சென்னையில் நடைபெற்றது. விழாவில் பேசிய கலைஞர், உருது இலக்கியங்கள் மற்றும் படைப்பாளிகளைப் பட்டியலிட்டு, அவை தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். அத்துடன் உருது மொழியின் பெருமைகள் சிலவற்றையும் குறிப்பிட்டார். “உருது மொழி வேறு எங்கேயோ உள்ள ஒரு நிலத்தின் மொழி அல்ல. உருதும் இந்திய மொழிதான் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். வரலாற்றுக் காரணங்களால் உருது மொழியில் பார்சி- அரபு மொழிகளின் செல்வாக்குப் பல வகைகளில் இடம் பெற்று இருந்தாலும் இலக்கண ரீதியில் இது முற்றிலும் இந்திய மொழியே. புள்ளிவிவரப்படி உருதுச் சொற்களில் 73.5 விழுக்காடு இந்திய மொழியே ஆகும்” என்று கூறி, தமிழ்நாட்டில் உருது மொழி வளர்ச்சிக்கான விதையாக ‘உருது அகாடாமி’யை ஊன்றினார்.*

### கைவிட்ட அ.தி.மு.க. அரசு

*உருது மொழியின் படைப்புகள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டும், தமிழ் இலக்கியங்கள் உருது மொழியில் மொழிபெயர்க்கப்பட்டும் ஆக்கப்பூர்வப் பணிகளை உருது அகாடமி முன்னெடுத்தது. ஆனால், 2011 முதல் 2020 வரையில் ‘உருது அகாடமி’ உறுப்பினர்கள் புதுப்பித்தலையே கைவிட்டது முந்தைய அ.தி.மு.க. அரசு. சட்டமன்றத் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பாக அவசர அவசரமாக உறுப்பினர்களைப் புதுப்பித்தது. ஆனால் அகாடமிக்கு உரிய இடமோ, நிதியோ விடுவிக்கப்படவில்லை. தி.மு.க. அரசு அமைந்தவுடன் இரண்டும் செய்யப்பட்டு, உருது அகாடமிக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு உயிர் கொடுத்தது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு..*

*உலகப் பொதுமறையாம் திருக்குறள் உருது மக்களுக்கு மட்டும் எப்படி அந்நியமாகும்? உருது மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தது, உருது அகாடமி. கல்வி நிறுவனங்கள் மூலம் உருது மொழியை வளர்த்தெடுத்தல், தமிழறிஞர்கள்- படைப்பாளிகளைப் பாராட்டுதல் எனப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது உருது அகாடமி. பயன்படுத்தாமல் விடப்பட்டு புதர்மண்டிக் கிடக்கும் பாதை போல முந்தைய அரசால் கைவிடப்பட்ட, ‘உருது அகாடமி’க்கு திராவிட மாடல் அரசு உயிர் கொடுத்தது வெறும் திட்டம் என்பதால் அல்ல. மதத்தைத் தாண்டி, மனிதம் போற்றும் மகத்துவத்தைக் கற்பித்த ‘கழகம்’ என்பதால்... அந்த மகத்துவம்தான் மதம் என்னும் ‘மதம்’ தமிழ்நாட்டை என்றும் தீண்டாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.*

**...வலம் வருவோம்**

## சூளகிரியிலிருந்து ஹார்வார்டுக்கு...

82 வயது முதிய பெண்மணி வீட்டில் தனியாக இருக்கிறார். வாசலில் காலிங் பெல் அழுத்தப்படுகிறது. அங்கே இரண்டு பெண்கள் நிற்கிறார்கள். “என்னால் எழுந்து வர முடியாது. உள்ளே வாங்க” என்று சொல்கிறார் முதிய பெண்மணி. அவர்கள் உள்ளே செல்கிறார்கள். கூடத்தில் ஒரு கட்டிலில் படுத்திருக்கும் முதிய பெண்மணிக்கு காய்ச்சல். “நீங்க படுத்துக்குங்க பாட்டிம்மா.. நாங்க மாசா மாசம் செய்கிற ரெகுலர் செக்கப்புக்கு வந்திருக்கோம்” என்றபடி ரத்த அழுத்தம் உள்ளிட்ட பரிசோதனைகளைச் செய்கிறார்கள் அந்த இரு பெண்களும். தனித்திருந்த அந்த முதிய பெண்மணிக்கு நம்பிக்கை கூடுகிறது. காய்ச்சல் குறைகிறது.

தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலும் கிராமங்களிலும் வீடு தேடிச் சென்று மூத்த குடிமக்களுக்கும், உடல் நலன் குன்றியவர்களுக்கும் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் கீழ் பரிசோதனைகள் நடைபெறுகின்றன. 2021 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாள் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் ஒரு மரத்தடியில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்.

சர்க்கரை (நீரிழிவு) நோய், ரத்த அழுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களை வீடு தேடிச் சென்று பரிசோதித்து, மாதந்தோறும் அவர்களின் வீடுகளுக்கே சென்று மருந்துகளை வழங்குவதுதான் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் நோக்கம்.

இந்தியாவிலேயே வீடு தேடிச் சென்று மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து, மருந்துகளை வழங்குவதில் முன்னோடியான திட்டம் தமிழ்நாடு அரசின் ‘மக்களைத் தேடி மருத்துவம்’தான். இதன் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் ஒரு கோடிக்கும் அதிகமான பேர் பயனடைந்திருக்கிறார்கள் நலம் பெற்றிருக்கிறார்கள். தற்போது இந்தத் திட்டம் குறித்து அமெரிக்காவின் புகழ்பெற்ற ஹார்வார்ட் மருத்துவப் பள்ளி, புளூம்பெர்க் பொது மருத்துவப் பள்ளி உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பள்ளிகளில் விளக்கவுரை ஆற்றச் சென்றிருக்கிறார், திராவிட மாடல் அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

தமிழ்நாட்டின் பிற நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய அளவிற்கான மருத்துவக் கட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரம்தான் வளர்ந்த நாடான அமெரிக்காவில் உள்ள அரங்குகளில் ஒலிக்கும் மக்களைத் தேடி மருத்துவம்.

-பத்திரிகையாளர் கோவி.லெனின் முகநூல் பதிவு

## :ப்ளாஷ்பேக்





கா.தங்கவேல்சாமி

### தளபதிக்கு மலர் கிரீடம்!

1994 -ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது, புதியம்புத்தூர் நகர மாணவர் அணி அமைப்பாளராக இருந்த நானும், கழகத் தொண்டர்களும் தளபதிக்கு மலர் கிரீடம் வைத்து சிறப்பு செய்தோம். தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளர் கலைஞரின் முரட்டு பக்தர் என்.பெரியசாமி அவர்களும், ஓட்டப்பிடாரம் ஒன்றியக் கழகச் செயலாளர் மு.துரைபாண்டியன் அவர்களும் உடன் இருந்தனர்.

**-கா.தங்கவேல்சாமி, துணை அமைப்பாளர், மாவட்ட மருத்துவர் அணி, தூத்துக்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கல்லக்குடிப் போராட்டத்துக்கு வழிகாட்டுதல்!


1953-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 மற்றும் 26 தேதிகளில் லால்குடியில் திருச்சி மாவட்ட 2 - வது மாநாடு நடைபெற்றது. தி.மு.கழக வரலாற்றில் இந்த மாநாட்டுக்கு சிறப்பான இடம் உண்டு. ‘கல்லக்குடிப் போராட்டம்’ நடத்தப்படுதல் வேண்டும் என்கிற வழிகாட்டுதலை, இந்த மாநாடுதான் வழங்கியது. எம்.ஜி.ஆர். கலந்துகொண்ட முதல் தி.மு.க. மாநாடும் இதுதான். சிவாஜி கணேசனும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

528

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.